
# திராவிடநாடு

28—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு


# அந்நாள் என்றோ!

உலகமே மிரண்டுகொண்டிருக்கும் அணுசக்தியைக் கொண்டு நன்மைபயக்கக்கூடிய அற்புதமான சாதனைகளைப் பெறலாம் — இந்த முயற்சிகளையும் ஒரு பக்கம் அமெரிக்கா செய்துகொண்டுள்ளது. மேலே உள்ள படம், எப்படி ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்து, ஆவன செய்யும் அறிஞர்கள் பணியாற்றும் நிலையம். அவர்களது முயற்சியின் விளைவாக, ஒரு நகரமே ஒளிமயமாகத் திகழ்வதை, கீழே உள்ள படம் காட்டுகிறது! பிட்ஸ்பர்க் எனும் அமெரிக்க நகரம், அணுசக்தியால் உண்டு





பண்ணப்பட்ட மின்சாரத்தால் ஒளி நகராகத் திகழ்கிறது. மின்சாரசக்தி மட்டுமல்ல, இன்னும் ஏராளமான நன்மைகளை "அணுசக்தி மூலம்" மனித சமூகம் பெறலாமாம். வெறிக் குணம் மறைந்து, நன்மை நாடும் விவேகம் வல்லரசுகளுக்கு மலரும் என்கிற அறிகுறி சமீபத்தில் ஜினிவாவில் நடைபெற்ற அகில உலக விஞ்ஞானிகள் மாநாடுமூலம் கிடைக்கிறது. ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியை உபயோகிப்பதுபற்றி அம்மாநாட்டில் விஞ்ஞானிகள் பேசினார்களாம். பேச்சுச் செயலாகும் நாள் என்றோ பிடிவாதம் மறைந்து மனித இன்பம் நாடும் நாள் எந்நாளோ!!

# பாரதி-யார்?

—[தென்னவன்]—

"பாரதி யார்?" எனும் தலைப்பைக் கண்டதும் யாரும் தவருக எண்ணிடவேண்டாம். என்னடா! இருபதாம் நூற்ருண்டிலும், "பாரதி—யார்?" எனக் கேட்கும் ஒருவன் தமிழகத்தில் இருக்கின்ருனே என அவசரப்பட்டுத் தவருக எண்ணிவிடவேண்டாம்.

தமிழகத்தில் முக்கியமாக-சிறப்பாக—பெருமையாகக் கொண்டாடப்படும் பாரதி விழாக்களில் மக்களுக்கு உண்மையான பாரதி காட்டப்படுவதில்லை. அங்கெல்லாம் தேசிய கவி பாரதிதான் காட்டப்படுகின்ருர். ஆனல் பாரதியைத்தேசியகவியாக மாத்திரம் பார்த்தால், நாம் முழுப் பாரதியையும் பார்த்ததாகக் கூறிவிட முடியாது. எப்படி என்ருல் — நாம் இன்னும் இலக்கியக் கவி பார்தி—சமயக்கவி பாரதி--சமுகக் கவி பாரதி ஆகியபல பாரதிகளைக் காணவேண்டியுளது.

தேசியக் கவி பாரதிக்கே இத்துணை சிறப்பளிக்கும் நாம், மேலே சொன்ன முழுப் பாரதியையும் பார்த்துவிட்டால், பாரதி இன்னும் புகழின் பலபடிகளைக் கடந்து, அதன் உச்சிக்கே சென்றிடுவார். ஏனே இன்று கொண்டாடும் பெரியவர்கள் பாரதியை முழுவதுமாகக் காட்டாது விட்டுவிடுகின்றனர்!

இன்றைய நிலையில் பாரதியார் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு மாத்திரம் சொந்தமல்ல, அவர் ஒரு பொதுக்கவி, எல்லோராலும் கொண்டாடப்படவேண்டிய கவி. தமிழகத்தின் குறை, பாரதியைக் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள்ளேயே காட்டிவிடுகின்றனர். பாரதியைப் பல கோணங்களிலிருந்தும் பார்த்தால்தான் அவரது முழு உருவத்தையும் பார்க்க முடியும்—பார்க்கவேண்டும். மாற்ருர் போற்றக்கூடாது என எண்ணுகின்றனர் — இன்று பாரதிக்கு விழா எடுப்போர்.

பாரதியார் பாடிய சுயசரிதை, வசன கவிதை, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு முதலியன நல்ல இலக்கியங்களுக்குச் சான்ரும். இங்கே இலக்கியங்களெனக் குறிப்பிடுவது—கதை போலும் தொடர்த் தன்மை பெற்றவற்றை. பாரதியார் தன் "சுயசரிதை" எனும் கவிதைத் தொகுதியில் பெண்களைப்பற்றிப் பாடியிருப்பதைப் பாருங்கள்.

"பெண்ணிற்கு விடுதலைநீ ரில்லை யென்ருல்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை"
"பெண்டாட்டி தனை யடிமைப்
படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப்
படுத்த லாமோ!"
"தாய்க்குமேல் இங்கேயோர்
பெண் தெய்வ முண்டோ?"
"வாக்குளதன் ருேபெண்மை அடிமை யுற்ருல்
மக்களெல்லாம் அடிமையுறல்
வியப் பொன்ருமோ?"

இதே கருத்தினை திரு. வி. க. அவர்கள் கூறுவதைப்பாருங்கள்:

"பெண்ணின்பால் எதில்லை? அவள் மாட்டு முகிலுண்டு; திங்களுண்டு; மலர்களுண்டு; குயிலுண்டு; மயிலுண்டு; மானுண்டு, பிறவும் உண்டு. இத்தகைய இன்பப் பொருளைத் துன்பப் பொருளாக எவன் கொள்வான்? காமுகன் — கீழ்மகன் — கயவன் கொள்வான்" எனச் சீறுகின்ருர். இனிப் பாரதிதாசன் பெண்களைப் பற்றிக் கூறுவதையும் பார்ப்போம்.

"பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்
என்கின்றீரே
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே!
ஊமையென்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு."

எனக் கூறுகின்ருர் — சற்று அழுத்தமாக. பாரதியின் வழி வந்ததாலன்ருே இவர்களும் இவ்வாறு கூறியிருக்கின்றனர். இம்மூவரின் கருத்தும் நிலவுலகினில் மக்களினம் இருக்குமளவும் நின்று நிலைபெறுதல் ஒரு தலையல்லவா!

பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து ஓரிடம்:

சகுனியின் வார்த்தையில் மயங்கி—சூதின்மேலுள்ள பிரியத்தினுல், தருமன் தன்னுட்டைப் பந்தயப் பொருளாக வைத்து இழந்திட்டான். இதைக் கண்டிக்கின்ருர் பாரதியார்:

"கோயிற் பூசை செய்வோர்
—சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்
—வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான
—நீதியவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்
—சிச்சி!! சிறியர் செய்கை செய்தான்
ஆட்டு மந்தையா மென்
—றுலகை அரச ரெண்ணிவிட்டார்"

என்று மிகமிகச் சினந்து கண்டிக்கின்ருர். இந்தப் பாரதியை—ஆம் பாரதத்தைக் கண்டிக்கும் இந்தப் பாரதியை — தமிழில் உயர்ந்த—நல்ல இலக்கியங்கள் தோன்ற வேண்டும் எனப் பேரவாக் கொண்ட இந்த இலக்கியக்கவி பாரதியை, யாரும் மக்களின் முன்னர் கொண்டுவந்ததில்லை. கொண்டுவரமாட்டார்கள்.

இனிச் சமயக்கவி பாரதியார் எப்படித் தோற்றமளிக்கின்ருர் எனப் பார்க்கலாம்.

"செத்த பிறகு சிவ லோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பர்
பித்த மனிதர் அவர் சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்"

(4-ம் பக்கம் பார்க்க)

★ அறிகுறி ★

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [28-9-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 11

மக்கள் தொகை
நிலப்பரப்பு
மூலப்பொருள் வசதி
இவைகளிருந்தும்
போதுமான பங்கு
அளிக்கப்படவில்லை!

*

மின்சார உற்பத்தி
நீர்ப்பாசன வசதி
போக்குவரத்து
தொழில்கள்
இவைகளில் மற்ற
இடங்களைவிட
'தென்னாடுகள்'
பின் தங்கியே உள்ளன!!

* * *

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் இந்நான்கு பகுதிகளையும் சேர்ந்த வியாபாரக் கழகத்தினர், முதன் முறையாக, கடந்த 19-ந்தேதி பெங்களூரில் கூடினர்.

இப்படி நான்கு மாநிலத்தினரும் ஒருசேரக் கூடுவது, இதுதான் முதல் தடவையாகும்.

இம் மாநாட்டில், ஏகமனதாக நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தையே நாம் தலைப்பில் தந்துள்ளோம்! ஐந்தாண்டுத் திட்டங்களில், டில்லி, "மாற்றுந்தாய்" மனப்பான்மையுடன் நடந்து வருகிறது என்று ஒவ்வொரு பகுதியினரும், முழக்கமிட்டிருக்கின்றனர்!!

"முதல் திட்டத்தில் 12-சதவிகிதம் செலவிட்டார்கள், தென்னாடுகளுக்கு. இரண்டாவது திட்டத்தில் 11-சதவிகிதம்தானும். மக்கள் தொகையையும் நிலப்பரப்பையும் வைத்துக் கணக்கிட்டால், மொத்த இந்தியாவில் நான்கு மொழி பேசும் நாமெல்லாம் கால் பகுதியாவோம். ஆனால் அந்த விகிதப்படி, உதவி தரவில்லை இந்திய அரசு" — என்று, ஆந்திர வர்த்தக சபைத் தலைவர் ஏகாம்பரம் என்பவர் கூற,

"அதிகாரம் நம்மிடமிருந்து வெகுதூரத்தில் டில்லியில் இருப்பதால் நம்முடைய தேவைகள் கவனிக்கப் படுவதற்கான வாய்ப்புகள் இல்லை" என்று மைசூர் வர்த்தகக் குழுவைச் சேர்ந்த கே. சாரங்கபாணி என்பார் குமுற, மேற்படி தீர்மானம் ஏகமனதாகப் போடப்பட்டிருக்கிறது, அந்த மாநாட்டில்.

"இந்த தி. மு. க.க்கள் பித்தலாட்டம் பேசுகிறார்கள்! வடக்காவது தெற்கை ஏமாற்றுவதாவது? எல்லாம் சரியாகத்தான் செய்கிறது எமது டில்லி" என்று காங்கிரஸ் அமைச்சர்கள் பேசலாம். ஆனால் உண்மை எங்கேயிருக்கிறது என்பதனையே, வர்த்தகப் பிரதிநிதிகளின் மாநாடு சொல்கிறது.

"கன்னடம், தெலுங்கு, தமிழகம், கேரளம், இந்நான்கும் வாணிபத் துறையில் ஒன்றுபட்டு நின்று போராடினால்தான், போதுமான நன்மைகளைப் பெறமுடியும்; அதற்கான ஒரு பொருளாதாரக் கவுன்சில் அமைக்கப்பட வேண்டும்" என்றும் மேற்படி மாநாட்டில் இன்னொரு தீர்மானம் போட்டுள்ளார்கள்.

இவர்களில் யாரும் தி. மு. க. அல்ல! மாற்றார் கூறுவதுபோல, நம்மைப்பற்றி இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளாமலிருக்கிற பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களும் கூடிய மாநாடு, அது. அங்கு

### வடக்கின் வஞ்சனை அதைக் களையும் வழி

இரண்டு குறித்தும் பேசப்பட்டு, பேசப்பட்டதோடு நில்லாது தீர்மானங்களும் போடப்பட்டுள்ளன என்றால் என்ன பொருள்? தி. மு. க. கூறி வருவது உண்மை என்பதுதானே!!

காங்கிரசார் எவ்வளவுதான் மறுத்தாலும் வடக்கின் வஞ்சனையைச் சமயம்வரும்போது ஒவ்வொருவரும்உணரவேசெய்வர். அப்படி உணரும்போது ஒன்று சேர்ந்து போராட எண்ணினால் இந்த நான்கு பிரதேசங்களுக்கும் ஒரு ஒற்றுமை ஏற்படுவதும், ஒன்றுபட்ட எண்ணம் உருவாவதும், யாராலும் தவிர்க்க முடியாததாகும். நாம் கூறுவதுபோல, இவை நான்கும் ஒன்றுக்கொன்று உடன் பிறப்புப் போன்று

தொடர்புகொண்டவை மட்டுமல்ல, பாசமும் நேசமும் தன்னாலே உருவாகும் சூழ்நிலையும் கொண்டவை யாகும்.

வர்த்தகக் குழுக்களிடம் முளைத்துள்ள இந்த அறிகுறிவளராது என்று யார்தான் சொல்லமுடியும்? இதேபோல, இன்றுள்ள காங்கிரசு ஆட்சிக்குப்பதில் கேரளத்தைப்போல, ஏனைய பகுதிகளில் காங்கிரசல்லாத ஆட்சிகள் அமையுமாயின், இந்த எண்ணம், ஆட்சி புரிவோர் என்கிற அளவில் உருவாகாது என்பது என்ன நிச்சயம்? டில்லியால், படாதபாடு படுத்தப்படுகிறதே, கேரளம்! நாளைக்கு, ஏனைய பகுதிகளிலும், இன்னொருகட்சியின் ஆட்சி ஏற்படின், இதே நிலைதானே ஏற்படும்!!

நமது சுதந்திரக் குரலின் வலிவையும் உண்மையையும், காங்கிரஸ் அமைச்சர்கள் எவ்வளவுதான் தாழ்த்திக் கூறினாலும், நாம் சொல்லாமலே ஒவ்வொரு இடத்திலும் தன்னாலேயே ஒற்றுமையும் ஒன்றுபட்டுப் போராடி டில்லியின் வஞ்சகத்தைச் சாடவேண்டும் என்கிற உணர்வும், ஏற்படத்தான் செய்கிறது.

இந்த அறிகுறி காண மகிழ்கிறோம். அதே சமயத்தில், இப்படிப்பட்ட சூழ்நிலைகளை உருவாக்கி, தமிழகம் தவிர்த்த மூன்று பகுதிகளிலும் நமது குரலைக் கொண்டு செல்லவும், பரப்பவுமான வாய்ப்புகளையும் வசதிகளையும் நாம் எவ்வளவு சீக்கிரம் பெற வேண்டியிருக்கிறது என்கிற அவசரத்தையும் உணர்கிறோம்.

வாய்ப்பும் வசதியும் கிடைத்து, இந்தப் பகுதிகளுடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்களும் அமைந்துவிட்டால், விடுதலைக் குரலை ஒடுக்க எவராலும் முடியாது. உண்மையைப்பிறரும் உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்! இந்த உணர்ச்சி, வலுக்குமாயின், காங்கிரசார் எவ்வளவுதான் கதறினாலும், திராவிடக் கூட்டாட்சி தன்னாலே ஏற்பட்டே தீரும்.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

என முதலடியிலேயே ஓங்கி அடிக்கின்றார். அடுத்து,

“ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
 அலையும் அறிவிலிகாள்!”

என அறிவுரை கூறி;

‘மெள்ளப்பல தெய்வம் கூட்டி வளர்த்து
 வெறுங் கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
 காட்டவும் வல்லீரோ?”

எனச் சீறிக் கேட்கின்றார் — மதவாதிகளை. இதே கருத்தை இவர்தம் சீடரான பாரதிதாசன் கூறுவதைப் பாருங்கள்:—

“சேசு முகம்மது என்றும்—மற்றும்
 சிவனென்றும் அரியென்றும்
 சித்தார்த்த னென்றும்
பேசி வளர்க்கின்ற பேரில்—உன்
 பெயரையுங் கூட்டுவார்
 நிலைப்ப வேண்டாம்
காசைப் பிடுங்குதற்கே—பலர்
 கடவுளென் பார்! இருகாதையும் மூடு
கூசி நடுங்கிடு தம்பி!—கெட்ட
கோயிலென் றுமொரு காதந்தி லோடு!”

என இடித்துரைத்துத் திருத்துகின்றார்.

இனி சமூகக் கவி பாரதியைப் பார்ப்போம்.

“மனிதரில் ஆயிரம் சாதி—என்ற
 வஞ்சக வார்த்தையை ஒப்புவதில்லை
ஒன்றுண்டு மானிட சாதி—பயின்று
 உண்மைகள் கண்டவர்
 இன்பங்கள் சேர்வர்”
“நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்—இந்த
 நாட்டினில் இல்லை; குணம் நல்லதாயின்
எந்தக் குலத்தின ரேனும்—உணர்
 வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்”

என்று, சாதி உயர்வு தாழ்வு பாராட்டும் சமூகர்கட்குப் பாடம் கற்பிக்கின்றார்.

இப்போது தெரிகின்றதல்லவ—நம்மிடமிருந்து மறைக்கப்பட்ட பாரதிகள் யார் யார் என்று. இன்றுவரை நாம் மேலே கண்ட பாரதிகளைக் கண்டோமா? காட்டினரா நமக்கு — இத்தகைய முழுப் பாரதியை, இனிமேலாவது காண, காட்ட முற்படுவார்களா? வாழ்க பாரதி பெயர்! ஓங்குக இமயமென அவர்தம் புகழ்!!

---

கடனுதவிகோரிப் பொருளாதாரத் தூதுக்குழுவொன்றை அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை கயாநு மேல் சட்டசபையில் ஜெய் நாராயண் சிங் என்பவர் கொண்டுவந்தார். இவர் எதிர்க் கட்சிக்காரர். ஆளும் கட்சியானது, இப்படிக் கடன் வாங்கி ஆட்சி நடத்த வேடிய அவசியமில்லை, வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி நம்மைநாமே சமாளித்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி 11 ஓட்டு வித்தியாசத்தில் இத்தீர்மானத்தைத் தோற்கடித்துவிட்டது! சம்பவம் செப். 20-ந் தேதி, நிகழ்ந்ததாகும். கயாநு, மிகவும் சின்னஞ் சிறிய நாடாகும்.

# வளரும் வடக்கு காணீர்!

—[கோவி. இளந்திரையன்]—

"வடக்கு வாழ்கிறது—தெற்குத் தேய்கிறது" என்று 'ஏக இந்தியா'க்களின் செவிப்பறை கிழியுமாறு புள்ளி விவரங்களோடு, எடுத்தியம்பினாலும் இதயத்தில் ஏற்று, சிந்தித்து ஆராயமறுத்து, தமிழகத்தின்—திராவிடத்தின் வாழ்வை வடவருக்குக் காட்டிக் கொடுத்துவிட்டு, வடக்காவது, தெற்காவது எல்லாம் வெறும் கற்பனை" என்று பேசிக் கற்பனை உலகில் சஞ்சரிக்கிறார்கள்.

இந்திய உபகண்டத்தில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு திட்டத்தையும் உன்னிப்பாக நோக்கினால்......இந்த அகில இந்தியாக்களின் ஒற்றுமைக்கீதம் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் மீறப்படுகிறது என்பதையும், தென்னக வளர்ச்சிக்கு மட்டும் ஒன்றுபட்ட இந்தியா வாதம் துச்சமென மதிக்கப்படுகிறது என்பதோடு, நம்முடைய வாதம் அப்பழுக்கற்றது—உறுதிபாடுடையது என்பது தெற்றென விளங்கும்.

வடநாட்டு ஏகாதிபத்தியம், ஐந்தாண்டுத்திட்டங்களில் திராவிடத்திற்கு இழைத்த அநீதியை மூடிவிட நினைப்போருக்கு வடக்கு வாழ்கிறது—தெற்குத்தேய்கிறது என்ற அங்கை நெல்லிக் கனி போன்ற உண்மைகளை இல்லையென மறுத்து, இண்டல் மொழி பேசித்திரிவோருக்குச் சில—பல எடுத்துக்காட்டுகள்.

தென்னகத்திற்கு வேண்டிய மின்சாரக் கருவிகள் உற்பத்தி செய்ய ஆவடியில் ஒரு மின்சாரக் கருவி உற்பத்தி நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்பது முடிவுக்கு வந்தது. ஆனால்...... திராவிடத்தைப் புறக்கணித்து—மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்திப் பழக்கப்பட்ட வடநாட்டு ஏகாதிபத்தியப் பேராசு, அந்தத் தொழிற்சாலையை வடநாட்டில்—போபால் நகரத்திற்கு மாற்றிவிட்டார்கள். தொழிற்சாலைக்கு முதல்கட்டபணிக்கெனத் தேவைப்படக்கூடிய தொகை ரூ. 21-கோடியாம்! இத்தொகை முடிந்தவுடன் திட்டத்திற்கு ஏற்றவாறு மேலும் மேலும் செலவழிக்கப்படுமாம்!

வடக்கே உள்ள பீகார் மாகாணம் தொழில் கோட்டமாகிறது. அம் மாகாணத்தில் ராஞ்சி நகருக்கருகில் "அத்தியா" என்னும் இடத்தில் ரூ. 20 கோடி மூலதனத்தில் ஒரு கனவார்ப்படத் தொழிற்சாலை நிறுவுவதற்கான ஆரம்பப் பணிகள் நிகழ்கின்றன. இத்துடன் நில்லாது இரஷ்ய உதவியுடன் ஒரு கன இயந்திர உற்பத்திச் சாலையும், இரண்டு சுரங்கத் தொழிற்சாலையும், இங்கிலாந்தின் கூட்டுடன் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. வளம் கொழிக்கும் வடநாட்டை மேலும் வளமாக்கும் வளமான திட்டங்களைத் தீட்டி உடனுக்குடன் பணத்தை பணமென்று பாராது வாரி இறைக்கப்படுகிறது.

கடிகாரத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்ற இடம் பெங்களூர் தான் என்று தெரிந்திருந்தும், அதனை வடக்கில்—பம்பாய் நகரத்தில் ரூ. 2 கோடி செலவில் ஜப்பான் நிறுவனம் ஒன்றின் கூட்டுடன் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. பால்பொடி, குழந்தை உணவு போன்ற பலவகை உணவுப் பொருள்களும் ரூ. 30 இலட்சம் செலவில் உற்பத்தி செய்ய ஏற்பாடாகிறது. இதுபோன்ற பல இலட்சம் பேர்களுக்கு வேலைதரக்கூடிய பல தொழிற்சாலைகளும் அங்கே—வடக்கே கட்டப்படுகின்றன.

மத்தியப் பேராசு தன் சொந்த நிர்வாகத்தில் ஐந்து பல்கலைக் கழகங்கள் நடத்துகின்றன. அந்தப் பல்கலைக் கழகங்களில் ஒன்று கூடத் தென்னகத்திற்குக் கிடையாது.

இதோ! "ஏக இந்தியாவே எமது இதய வாதம்" என்று சொல்லும் கம்யூனிஸ்டுகள் ஆட்சி செய்யும் கேரள அரசு, அங்கு கிடைக்கும் தென்னை மட்டையிலிருந்து நார் உரித்துத் தொழில் நடாத்த மத்திய அரசிடம் எமக்கு தேவை ரூ. 248 இலட்சம் என்று கேட்டது. வழக்கம்போல் வெட்டு கேட்ட தொகையில் என்று கூறி ரூ. 98 இலட்சம் குறைத்து ரூ. 150 இலட்சம் மட்டும் தர இயலும் என்று கூறிவிட்டது. பாரீர் வடக்கின் வஞ்சனைப் புத்தியை என்று நாம் சொன்னால், எங்கோ தன் மூளையை அடகு வைத்த இந்த "காம்ரேட்"கள் இதெல்லாம் பிரிவினைப்பித்து என்று கூறிவிட்டுக் கேரள நிகழ்ச்சியை மனதில் வைத்துக்கொண்டு, அநியாயமாக மத்திய அரசு மாகாண அரசில் தலையிடுகின்றது என்கிறார்கள். ஏனோ இந்த இரட்டைப் புத்தி.

மொழியால்—கலாச்சாரத்தால் பண்பால்—பழக்க வழக்கத்தால் வேறுபாடு கொண்ட வடவருடன் நாம் ஒன்றாக இருக்கும் வரையிலும், தென்னகத்திலிருந்து நாம் வரிமூலம் செலுத்தும் ரூபாய் 66-கோடியில் ஏதோ கொஞ்சம் தருகிறோம் எனக்கூறிவிட்டுத் தன்னை வாழ்விற்கே செலவிட்டுக்கொண்டிருப்பார்கள். வளரும் வடக்கைக் கண்டாவது தென்னகம் வாழ—திராவிடம் விடுதலை அடைந்தே ஆகவேண்டும் என்று கூறி, கடைசியாகப் பொருளாதாரநிபுணரான டி.கோஸ்டா கூறியதை நினைவுபடுத்துகின்றோம்.

"டெல்லி எந்த ஒரு காரியமானாலும், தென்னாட்டைத் தன் பட்டியலின் கடைசியில்தான் நிறுத்துகிறது. எல்லாப் பெரிய தொழில்களும் வடநாட்டிற்கே ஒதுக்கப்படுகின்றன."

# சுரங்க வாழ்க்கை

அன்பிற்குரிய நண்பா!

சுரங்க வாழ்க்கையைப்பற்றிச் சுவைபடத் தெரிவிக்குமாறு வேண்டியிருந்தாய். என் உள்ளம் சுரங்கத் தொழிற் பயிற்சியில் ஒன்றுகின்றதா என்றும் ஆர்வத்தோடு வினவியிருந்தாய்.

உலக வரலாற்றைப் புரட்டியபடி, இரேக்கம் சீரும் சிறப்புமாக வாழ்ந்த வரலாற்றையும், அது வீழ்ந்த கதையினையும், கோலாகலமாக வாழ்வு நடத்தி, இறுதியில், ஆடம்பரச்செலவால் அனைத்தையும் இழந்த ரோமர்களையும், இங்கிலாந்தில் ஜனநாயகம் அடைந்த படிப்படியான வளர்ச்சியையும், "சாமானியர்கள்" என்று அலட்சியப்படுத்தப்பட்டவர்களால் நிகழ்த்தப்பட்ட மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியையும் அகக்கண்களால் கண்டுகொண்டிருந்தவனை — பேரறிஞன் பிளேட்டோவின் "உரையாடல்களை"யும் நாடோடி வாழ்க்கை நடாத்திய ஞானி ரூஸ்ஸோவின் "சமுதாய ஒப்பந்தத்"தையும்; இளம் இத்தாலியர்களை ஒன்றுகூட்டிப் புதிய இத்தாலியைச்சமைக்க அரும்பாடுபட்ட மேதை மாஜினியின் "மனிதர் கடமை"யினையும், உலக வரலாற்றில் நல்லிருக்கை பெற்ற இருபெரும் புரட்சிகளான பிரெஞ்சு — அமெரிக்கப் புரட்சிகளை நேரில் கண்ணுறும் வாய்ப்பைப் பெற்றவனான தாமஸ் பெயினின் "மனித உரிமைகளை"யும், ரஷ்யத்து ஞானி டால்டாயின் "நாம் இனிச் செய்யவேண்டிய யாவை"யையும், நாத்திக இங்கர்சாலின் ஆணித்திறமான வாதங்களையும்; அமெரிக்கத் தத்துவ ஞானி எமர்சனின் கனவு நடைக் கட்டுரைகளையும், நந்தம் முன்னோர் சிறப்புற நடாத்திய வீர வாழ்வையுணர்த்தி வலியூட்டும் "புறத்தை"யும், அறிவுடைப் பெருமக்கள் உலகோர்க்கு அன்பளிப்புகளாகத் தந்துவிட்டுப் போயிருக்கிற இன்னபிற நூல்களையும் படிப்பதிலேயே நாட்டம் கொண்டிருந்த 'ஒருவனை — அவனுக்கு முற்றிலும் புதிய துறையான சுரங்கத் தொழிற்பயிற்சியிலீடுபடுத்தினால் அவன் நிலை என்னவாகும்?

என்னரும் நண்பனே, என்னை நன்குணர்ந்தவனான உனக்கு, எனது நிலையைப்பற்றி இன்னும் விளக்கத் தேவையில்லையென்றெண்ணுகிறேன்.

'உன்னுடன் பயிலும் வடவர்கள் எப்படி நடந்துகொள்ளுகின்றனர்?' என வினவியிருந்தாய். விடுதியிலுள்ள வடநாட்டு மாணவர்களின் நடத்தையைக் கண்டு ஏக இந்தியம் பேசும் இதர திராவிட மாணவர்கள்கூட 'நாம் வேறு, அவர்கள் வேறு' என்ற உண்மையினை உணரத் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தியினை உன்னுடைய அந்தக் கேள்விக்கு விடையாகத் தருகின்றேன்.

புதுப்புது அனுபவங்களைத் தருகிற இந்தச் சுரங்க வாழ்க்கை என் உள்ளத்திற்கு நிறைவைத் தருவதென்னவோ உண்மைதான். "சாக்கடையைப்பற்றி எழுதுகிற எழுத்தாளன்" என்று பெயர் பெற்ற எமிலி ஜோலாவின் தலைசிறந்த நாவலான "ஜெர்மினலை" (விதை முளைக்கும் நிலை) நான் படித்திருக்கிறேன், சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கையைத் தெள்ளத் தெளியத் தெரிவித்திருக்கும் அந்த நாவலைப் படிக்கையில் சுரங்கத் தொழிலாளரிடையே வாழ்க்கை நடத்த வேண்டுமெனப் பெரிதும் விழைந்தேன்; எதிர்பாராதவிதமாக இப்போது என் ஆசை நிறைவேறிவிட்டது!

ஏராளமான நிலக்கரியைத் தன்னுள் புதைத்துவைத்திருக்கும் மத்தியப் பிரதேசத்தில் நான் பயிற்சி பெறுகின்றேன். எங்கு நோக்கினும் அடர்ந்த காடுகளும், குன்றுகளும், பாறைகளும், மண்டிக்கிடக்கும் புதர்களுமாகக் காட்சியளிக்கும் இம் மாநிலத்தில், நான் தங்கியுள்ள ஊரும் ஒரு குன்றுப் பிரதேசம்தான். சிர்மிரி என்பது சிறு குன்றின்மீது இலங்கும் ஒரு சிற்றூர், இக்குன்றையடுத்துள்ள மற்றொரு குன்றின் அடிவாரத்திலேயே நான் பயிற்சி பெறும் நிமித்தம் நாள்தோறும் செல்கின்ற சுரங்கம் வாயைப் பிளந்தபடி காட்சியளித்துக்கொண்டிருக்கிறது.

இயற்கை இப்பகுதியில் எழிலுறத் திகழ்கின்றாள். பசுமை விரித்துள்ள குன்றுகளில் இளமை தவழும் மரங்கள் எந்நேரமும் குளிர் காற்றை வழங்கியவாறிருக்கின்றன. குன்றுகட்கு நடுவே சிற்றோடைகள் சலசலத்துச் சென்றபடியுள்ளன. பாறைகளின் உச்சியிலிருந்து வீழ்ந்தபடியிருக்கும் அருவியைக் காண்கையில் உள்ளம் பெரிதும் உவகையுறுகின்றது. ஒற்றையடிப்பாதைகளின் வழியாகச் செல்கின்ற தருணத்தில் எங்கோ உற்பத்தியாகி எங்கோ சென்றுகொண்டிருக்கும் நீரின் ஓசை துல்லியமாகக் கேட்டவண்ணமிருக்கிறது. பேய் மழை பெய்து ஓய்ந்தவுடன வெகுஉயரத்திலிருந்து பேரிசைச்சலிட்டபடி கீழே விழுந்து சிதறும் நீர்வீழ்ச்சிகள் ஏராளமாகப் பிறக்கின்றன.

கதிரவன் ஒளிபட்டதும் சிலிர்த்து நிற்கும் மரங்களின் பசுமைநிறம் எங்கும் பிரதிபலிக்கக் காண்கின்றேன். இயற்கையின் பேரழகைப் பருகியவண்ணம் இப் பிரதேசத்தில் அலைந்துகொண்டிருக்கிறேன்.

பொழுது புலர்ந்ததும் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு சுரங்கத்திற்குப் புறப்படுவோம். சுரங்கத்தினுள் நுழையுமுன் வெளியிலுள்ள அலுவலகத்தில் ஒவ்வொருவரும் தம் பெயரைப் பதிந்துகொள்ளல் வேண்டும். அதன் பின்னரே உள்ளே செல்ல இயலும். சுரங்கத்தினுள் நாள் முழுவதும்—இருபத்து நான்கு மணி நேரமும் அலுவல் நடந்துகொண்டேயிருக்கும். அலுவல் நேரம் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரிவினர் காலை 7-மணிமுதல் பிற்பகல் 3-மணிவரையிலும், மற்றொரு பிரிவினர் பிற்பகல் 3-மணி முதல் இரவு 11-மணி வரையிலும், பிறிதொரு பிரிவைச் சேர்ந்தவர்கள் இரவு 11-மணிமுதல் காலை 7-மணி வரையிலும் பணிபுரிந்தாக வேண்டும்.

எங்கெங்கெல்லாமோ நீண்டு வளைந்து செல்லும் சுரங்கப்பாதைகளில் நடந்து செல்கையில், காசநோய்க் கிருமிகள் மனிதனது உடலத்தைச் செல்லாக அரித்தெடுத்து விடுவதுபோலவே, மனிதனும் கரியினைப் பெறுவதற்காக நிலத்தை அரித்துவிட்டதை உணர்கிறேன். நாங்கள் தங்கியுள்ள விடுதி, எங்களுக்குப் பாடம் போதிக்கப்படும் கல்விக்கூடம், இங்குள்ள மருத்துவவிடுதி, இதர அலுவலகங்கள், வாணிபம் நடைபெறும் கடைத்தெரு எல்லாவற்றிற்குக் கீழேயும் சுரங்கப்பாதைகள் மலைப்பாம்புகளென நீண்டு நெளிந்து செல்கின்றன!

சுரங்கப்பாதைகட்கு நடுவில் தண்டவாளம் படுத்துக் கிடக்கிறது. சுரங்கப்பாதை எங்கெல்லாம் செல்லுகின்றதோ, அங்கெல்லாம் தண்டவாளமும் கூடவே செல்லும். அவற்றில் வினாடிக்கொருமுறை கரியள்ளிச் செல்லும் வண்டிகள் பேரிரைச்சலிட்டுக்கொண்டு சென்றபடியிருக்கும். பாதையின் இருபுறத்துச் சுவர்களிலும் ஆங்காங்கே நான்கடி அகலமும் ஐந்தரையடி உயரமும் கொண்ட துவாரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. பாதையில் செல்பவர்கள் விரைந்து வரும் இந்த வண்டிகளிடத்தினின்று தங்களைப் பாதுகாத்துக்கொள்ள 'Men hole' எனப்படும் இத்துவாரங்களில் பதுங்கிக்கொள்வார்கள்.

தொழிற் பயிற்சிபெறும் நிமித்தம் வந்துள்ள நான், இயந்திரங்களின் நுணுக்கங்களைக் கவனிப்பதற்குப் பதிலாக இங்குள்ள தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையினையே உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன். சமுதாயத்தின் இயல்பையறிந்து, அதன் குறைகளை நிவர்த்திப்பதில் பேரார்வம் கொண்டுள்ள ஒருவனுக்கு, இயந்திரங்களின் இயல்பினை அறிந்து அவற்றின் குறைகளையும் கேடுகளையும் களைவதில் உள்ளம் ஈடுபடுமா நண்பா?

இங்கு வங்காளிகளே பெரும்பாலோராகக்காணப்படுகின்றனர். சில ஆண்டுகட்குமுன் இவர்களது ஆதிக்கமே இப்பகுதி முழுவதும் இருந்ததாம். வங்காளிகளே எல்லா இருக்கைகளையும் கைப்பற்றியிருந்தனர். கரியள்ளும் தொழில்புரிய வருபவன் வங்காளியாக இருப்பின், கூடிய விரைவில் அவன் பதவி உயர்ந்துவிடும்; ஊதியமும் கூடிவிடும். தற்போது இவர்களது கொட்டம் சற்று ஓய்ந்துவிட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் நாகரிகமில்லாத பழங்குடியினர். இவர்கட்கென்று சர்குஜியமொழியென்று தனிமொழியொன்றும் உள்ளது. 'இந்தி பேசப்படும் மாநிலம்' என்று கருதப்படும் மத்தியப் பிரதேசத்தில்தான் இப்படியொரு மாவட்டமே இருக்கிறது! சர்குஜியன் ஒருவனிடம் இந்தியில்பேசினால், அதைஅவன் புரிந்துகொண்டு தன்மொழியான சர்குஜிய மொழியிலேயேதான் விடையிறுப்பான். ஏனெனில் இந்தி அவனுக்குப் புரியும் — ஆனால் பேசத் தெரியாது!

பலஆண்டுகளாகஇந்தச்சர்குஜியர்களுக்குப் பணத்தின் அருமையே தெரியாமலிருந்ததாம். இப்பொழுதும், புகைவண்டி நிலையத்திலேயிருந்து கனமான பொருட்களைக் குன்றின்உச்சிக்குச் சுமந்து வரும் சர்குஜியப் பெண்கள் எட்டு அணுக்களுக்குள்தான் சுமைகூலி கேட்கின்றனர்! அதே சுமைகளைப் பெரிய புகைவண்டி நிலையத்துப் போர்ட்டர்கள், கூலி மூன்று ரூபாய்கட்குக் குறைவாக இருப்பின் தொடக்கூட மாட்டார்கள்!

நான் பயிற்சிபெறுகின்ற சுரங்கம் எவ்வித ஆபத்துமற்ற பாதுகாப்புச் சுரங்கம் (Safety Mine) தான். அசன்சால் போன்ற விபத்துக்களை வெகு எளிதில் உண்டாக்கிவிடும் பல்வேறு கொடிய ஆவிகள் வெளிப்படக்கூடிய ஆபத்தான சுரங்கம் (Gaseous Mine) அல்ல; எரியும் தீப்பந்தத்தைக்கூட உள்ளே எடுத்துச் செல்ல இங்கு அனுமதியுண்டு. பலவீனமடைந்த மேற்பகுதி இடிந்து விழுதல், மேற்பரப்பு, பாறையாக இராமல் சேறாக இருந்து, அது பாதையை மூடிவிடுதல் இவையே இங்குள்ள விபத்துக்கள்.

பலவீனமடைந்த மேற்பகுதி இடிந்து விழாமலிருக்கப்பல்வேறு வகையான உத்திர அமைப்புக்கள் (Timbering) கையாளப்படுகின்றன. கூரையின்கீழ் குறுக்கும் நெடுக்குமாக மரக்கட்டைகள் போடப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் கவனக்குறைவால் சில இடங்களில் சுரங்கப்பாதைகளின் மேற்கூரை அவ்வப்பொழுது இடிந்து விழுந்தவாறிருக்கின்றது.

சுரங்கப்பாதைகளில் ஆங்காங்கே மின்சார விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருக்கும். இதர பகுதிகளிலெல்லாம் இருள் கவிந்து கிடக்கும்! சுரங்கத்தினுள் இளைப்பாறுவதற்காகச் சற்று விசாலமான அறைகளும் உண்டு.

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்—எதனூடும்
நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்று
ஓதியறியீரோ!"

—பாரதியார்

அவற்றில் குடிதண்ணீரும், முதலுதவிப் பெட்டியும், இளைப்பாறுவதற்கான மரப்பலகைகளும் இருக்கும்.

வெளியிலுள்ள தூயகாற்றைச் சுரங்கத்தினுள் செலுத்த, பிரும்மாண்டமான மின்சார விசிறி இயங்கிக்கொண்டேயிருக்கும். விசிறி இயங்குமிடத்தை விசிறிக் கூடம் (Fan house) எனக் குறிப்பிடுவார்கள்.

ஒவ்வொரு சுரங்கப்பாதையின் முடிவிலும் காட்சியளிக்கும் வெட்டியெடுக்கப்படுவதற்கான கரிச் சுவரை, கரிமுகம் (Coal face) என்றழைப்பார்கள். இக்கரிமுகம் வெடி வைத்தல் (Blasting) மூலமாகவே வெட்டியெடுக்கப்படுகிறது. கரியறுக்கும் யந்திரம் (Coal cutter) ஒன்று முதலில் கரிமுகத்தின் அடிவாரத்தை ஆறடி ஆழத்திற்கு அறுத்துவிட்டுச்செல்லும். பின்னர் துளைபோடும் கருவியால் கரிமுகத்தில் ஆறடி ஆழத்திற்கு மும்மூன்றாக ஒன்பது துளைகள் போடப்படும். துளைகளில் மருந்தைத் திணித்து, தொலைவிலிருந்தவாறு அத்துளைகளில் மின்சாரத்தைச் செலுத்திக் கரிமுகத்தைச் சிதற வைப்பார்கள். தொழிலாளர்கள் சிதறிய பெரிய கரித்துண்டங்களை அள்ளி அங்கு வந்து நிற்கும் வாகன்களில் நிரப்புவார்கள்.

ஒரு தொழிலாளி ஒரு வாகனை நிரப்பினால் அவனுக்கு ரூ. 2-10-0 ஊதியம் கிட்டும். கரியள்ளும் தொழிலாளர்கள் பல குழுக்களாகச் சேர்ந்து பல வாகன்களை நிரப்பிப் பின்னர் அவற்றிற்கான ஊதியத்தைப் பகிர்ந்து கொள்வர். கூரையைச் செப்பனிடுவது, தண்டவாளங்களைச் சீராக்குவது போன்ற தொழில்களைப் புரிவோர் நாளொன்றுக்கு ரூ. 1¾ விதம் ஊதியம் பெறுகின்றனர்.

மதுவிலக்கு இப்பகுதியில் அமுலில் இல்லை. கரியள்ளும் தொழிலாளர்களது ஊதியத்தின் பெரும்பாகம் சாராயக் கடையிலேயே கரைந்துபோய் விடுகிறது. இத்தொழிலாளர்களுக்குச் சாராயம் இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை; சுரங்கத்தினுள் விலங்கைப்போல் — இயந்திரம்போல்— உழைக்கும் தொழிலாளி சாராயத்தின் துணை ஒன்றினால் மட்டுமே தன் களைப்பை மறைக்க முடியும். ஆனால் களைப்பை மறைக்கும் பொருட்டு ஒரு கோப்பை மது வருந்தும் தொழிலாளி பின்னர் களிப்படை எய்தும் பொருட்டுத் தன் ஊதியம் முழுவதற்குமே சாராயம் வாங்கி அருந்திவிடுகிறான். வீடு திரும்பியதும் இல்லாள் அழுகின்றாள். சிறார்கள் பசியால் வெம்புகின்றனர்; இல்லாமை இல்லத்தில் பேயாட்டம் போடுகிறது.

சுரங்கத் தொழிலாளர் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட அளவுதான் குடித்தல் வேண்டும் என்ற சட்டத்தை அரசு அமுலுக்குக் கொண்டுவந்து, அத்துடனின்றி, அச்சட்டம் மீறப்படாதவாறும் நன்கு கவனித்துக் கொள்ளுமாயின் தொழிலாளர்களது இல்லத்தில் இன்பம் நிரந்தரமாகக் குடியேறும்.

தோழா, ‘உன் வாழ்க்கை எப்படியிருக்கிறது?’ என்று வினவியிருந்தாய். கரித்தூள் கலந்த காற்றை வடிகட்டிச் சுவாசித்தபடி நீண்டுகிடக்கும் சுரங்கப் பாதைகளில் பயணம் புரிகின்றபோதெல்லாம் என் உள்ளத்தில் கொலுவிருந்தபடி எனக்கு வழிகாட்டியாகத் திகழும் என் தலைவன் “தாயக விடுதலையே உனது குறிக்கோள்—விரைவில் நடைபெறவிருக்கும் சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொள்ள மறந்துவிடாதே” என்று கூறியவாறிருப்பதை உணர்கிறேன்.

ஆதியந்தமில்லாத — இருள் மண்டிக்கிடக்கும்—சுரங்கப் பாதைகளில் மங்கிய ஒளியினை உமிழும் சிறு விளக்கைக் கரத்தில் ஏந்தியபடி அலைகிற போதெல்லாம் என் உள்ளம் என் தாயகத்தையும், என்னுடன் பிறந்தோரான தாயகத்தவரையும் பற்றியே சிந்தித்தவாறிருக்கின்றது. அடிமைத் தளையுடன் திகழும் என் நாட்டையும், அடிமைகளாய் வாழ்வு நடாத்தும் உடன்பிறந்தோரையும் எண்ணியபடி சுரங்கப்பாதையில் நடந்து செல்கையில் ‘என்று நம்மவருக்கு விடிவு காலம் பிறக்கும்? விடுதலை எப்போது கிட்டும்?’ என்று என் உள் மனம் விநாடிக்கொருமுறை வினவியவண்ணமிருக்கிறது.

நடந்துகொண்டேயிருக்கிறேன், இருளும், புழுக்கமும், மேடும் பள்ளமும் நிறைந்த பாதையில் நடந்துகொண்டே இருக்கிறேன்; இதற்கொரு முடிவேயில்லை; எங்கே எதற்காகப் போகிறோம் என்று தெரியாமல் நடந்துகொண்டே இருக்கிறேன்; பெரும் பயணம்......எல்லை எது என்று தெரியவில்லை; எல்லையினை எப்போது எய்துவோம் என்பதும் விளங்கவில்லை; ‘இது சுதந்திரத்தை அடைவதற்காக நாம் செய்கிற பயணம்தானோ?’ என்ற பிரமை நெஞ்சில் பிறக்கிறது...

கதிரவனொளி படர்ந்த வெளிப்புறத்தைச் சுரங்கத்தினுள்ளே இருந்து பார்க்கையில் ஏதோ பேரொளிப் பிழம்பே சற்றுத் தொலைவில் நிற்பதாகத் தோன்றுகிறது. ‘சுதந்திரத்தை அடைந்துவிட்டோம்; விடுதலையை அணுகிவிட்டோம்’ என்று உள்ளம் களிப்பினில் மூழ்குகின்றது. சிறிது நேரங்கழித்த பின்னரே விழிகள் பகுத்தறிவின் துணையால் எதிரே தெரிவது வெயிலில் மூழ்கியுள்ள வெளிப்புறம் என்பதைத் தெரிந்துகொள்கின்றன.

நண்பா, முடங்கல் பெரிதும் நீண்டுவிட்டது; மற்றவைகளை மறுமுறை எழுதுகையில் குறிப்பிடுகின்றேன்.

“நம் கொடி உயர்த்தப்படட்டும்; நம் கொள்கை பரவட்டும்; தாயகம் விடுதலையுறும் நாள் விரைந்து வரட்டும்” என்ற கழகம் பிறந்த புனித நாளுக்கான வாழ்த்துடன் விடைபெற்றுக்கொள்கின்றேன்.

அன்பன்,

**மலர்மன்னன்.**

வையகம் காப்பவ ரேனும்—சிறு
வாழைப் பழக்கடை வைப்பவ ரேனும்
பொய்யக லத்தொழில் செய்தே—பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கனும் மேலோர்.

—பாரதியார்.

# அனாதை

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அழையாமலே வந்து கேட்காமலே சென்றுவிட்டன இரண்டு ஆண்டுகள். இப்போது நான் விஞ்ஞான இளைஞர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். எப்போதும் புதுமையில் பெண்களுக்கு நாட்டம் உண்டு என்பார்கள். அந்தக் காரணத்தாலோ என்னவோ, விஞ்ஞான வகுப்பில் அதிகமாணவிகள் இருந்தார்கள், கலை வகுப்பில் இருப்பதைவிட.

அதுவும் மாநிலக் கல்லூரி என்றால் கேட்கவேண்டியதில்லை. ஒரு வகுப்பிலிருந்து மறு வகுப்புக்குச் செல்லும்அந்தபெண்கள்கூட்டத்தைப் பார்த்தால் மருண்டோடும் மான் கூட்டமோ, பட்டொளிவீசும் மயில் கூட்டமோ, அல்லது வாசனைகமழும் மலர்ச்செண்டோ என்று சந்தேகிக்கும் வகையில் இருக்கும்.

என் வகுப்பிலும் அந்த மானினம் இருக்கத்தான் இருந்தது. மானினத்தை வேட்டையாடும் ஒரு சில வேடர்களும் என்னுடன் படித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் போட்ட வலையிலே சிக்கிய மான்கள் ஓரிரண்டு தான்—அவைகளுக்காக நான் மிகவும் வருந்தினேன்.

நான் படித்துக்கொண்டிருந்த அந்த இரண்டு ஆண்டுகளில் எல்லோர் மனத்தையும் என்பால் ஈர்த்தேன். நான் அப்படி ஒன்றும் மன்மதன் இல்லை. சமூகசேவையில் ஈடுபட்டேன். பகலென்றும் இரவென்றும், மழையென்றும் வெயிலென்றும் பாராமல், சமூக சேவை செய்து வந்தேன். என்றும் சிரித்த முகத்தோடு யாவரோடும் பேசினேன்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசவில்லை. இந்தக் குணமே என்னை மற்றைய மாணவர்கள் மத்தியிலே உயர்ந்தவனாகக் காட்டிற்று.

வெளிக்காக வேடம்போட்டு ஒரு பெரிய பணக்காரன் மகன் என்று காட்டிக்கொள்ளவில்லை. என்றும், எதிலும் எளிமையையே கையாண்டேன்.

எனக்கே தெரியும், என்னோடு படிக்கும் பெண்கள் பெரும்பாலும் பெரிய பணக்காரர்கள் அல்லது பெரும் பதவியிலுள்ளவர்களின் புதல்விகள் என்று. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

என்னோடு படித்த மாணவிகளில் ஒருத்தி — நல்ல அழகி. பெரிய இடத்துப் பெண்கூட— அவளைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அல்லியின் நினைவுவரும். அப்போதே நான் அல்லிக்கு சொன்ன அந்த வார்த்தைகளும் ஞாபகத்திற்குவரும் —"வாழ்க்கை கானல் நீராகக்கூடாது — சுனை நீராகவேண்டும்"

நான் எங்கள் விலங்கு நூல் சங்கத்திற்குச் செயலாளர் பதவி ஏற்றேன். அவள் — ஆம் அவளே தான்—லீலா — உதவிச் செயலாளர் ஆனாள். இரண்டு ஆண்டுகளாக அவளைப் பார்த்திருக்கிறேனே ஒழிய, அவளிடம் பேசியதில்லை — ஒரு சிறிது அச்சம்கூட இருந்தது.

**ச. இராமலிங்கம்**

எப்படியோ பேச ஆரம்பித்துவிட்டேன் — பேசிக்கொண்டே இருந்தோம். நாட்கள் ஓட ஓட, நாங்கள் பேசும் காலமும் அதிகரித்தது. எனக்கே விளங்கவில்லை ஏன் என்று.

அவள் ஒரு நாள் கல்லூரிக்கு வரவில்லை என்றால், நான் எதையோ இழந்தவன்போல் இருப்பேன்.

இப்படித்தான் ஓரிரண்டு மாதங்கள் உருண்டன. எங்கள்பால் நட்பு மலர்ந்தது. எனக்கு அப்போதுதான் நினைவுக்கு வந்தது பழைய எண்ணங்கள்.

"அன்பு காதலாக மலருமென்றால், இதுபோன்ற இரண்டு துருவங்களுக்கும் இடையே ஏற்பட முடியாது—ஏற்பட்டாலும் சமூகம் ஏற்காது—ஏற்றதுபோல் பாவனை செய்தாலும், சமூகம் வாழ இடம் தராது"

சிந்தித்தேன் — 'சிந்தித்தேன் இந்தச் சிந்தனையிலேயே நான் அவளிடம் பேசுவதையும் ஓரளவு குறைத்துக்கொண்டேன்.

ஆனால் அவளை நினைக்கும் போதெல்லாம், பார்க்கும் போதெல்லாம் அல்லியின் நினைவு வரும். இப்படித்தான் லீலாவும் அல்லியும் என் மனதில் மாறி மாறித் தோன்றினார்கள்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் எழிலூரிலிருந்து, என் அத்தை வந்தாள். நலம் விசாரித்துக் கொண்டோம். கடைசியாக வழக்கமாகக் கேட்பதுபோல் "அத்தை உங்கள் ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா" என்று கேட்டேன்.

எனக்குத் தெரியும் என்னபதில் வரும் என்று! வெள்ளித்தேர், அல்லது கருடசேவை இப்படித் திருவிழாவைப்பற்றி ஏதாவது சொல்லுவார்கள்! ஆனால் அன்று அத்தை ஏதோ பீடிகையுடன் கதை ஆரம்பித்தாள்.

"சந்திரா இந்தச் சமாசாரம் உனக்குத் தெரியுமா!"

"எந்தச் சமாசாரம் அத்தை! சொன்னால்தானே தெரிந்து கொள்வதற்கு"

"இவ்வளவு மோசமாக நடக்கும் என்று நினைக்கவில்லை"

சரி இவர்கள் ஏதோ திருவிழா மிகக்கேவலமாக நடந்திருப்பதைக் குறித்துச் சொல்கிருர்கள் என்று நினைத்து,

"என் அத்தை, பாண்டு; நாதஸ்வர கச்சேரி ஒன்றும் வைக்கவில்லையா?" என்றேன்.

"தம்பி அதெல்லாம் இல்லாமலேயே இன்று ஊரே சிரிக்குதே"

"என்ன அத்தை எனக்கு ஒன்றுமே புரியவில்லையே"

"தம்பி — அந்தப் புதிய பணக்காரர் இருக்காரே, அவர் மகள் அல்லி நேற்றுக் காலை ஒரு பையனோடு ஓடிவிட்டாள்"

அல்லி ஓடிவிட்டாள் என்றதும் நெருப்பை மிதித்தவன்போல் துடித்தேன். வானமே இடிந்து விழுவதுபோல் இருந்தது; கண்கள் சுழன்றன. ஆனல் உள்ள எழுச்சிகளை அத்தைக்குக் காட்டக் கூடாது என்பதற்காக "பாவம்" என்று சொல்லிவிட்டு கல்லூரிக்குப் போய்விட்டேன்.

கல்லூரியில் அன்று பாடங்கள் சிரமமாகத்தான் நடந்தது—லீலாவும் ஏதோ வந்து பேசிவிட்டுத்தான் போனுள். ஏன் சாதாரணமாகப் பேசுவதைவிட அன்று சிறிது அதிகமாகவே பேசினுள்—சிரித்துப் பேசினுள்—குழைவோடு பேசினுள்.

இருப்பினும் என் உள்ளமெல்லாம் அல்லியின் மீது சென்றது.

"அல்லி ஓடிவிட்டாள்"—ஓடிப்போனவள்! இதுதான் சமுகம் அவளுக்கு அளித்திருக்கும் அழிக்க முடியாத, மறுக்க முடியாத, மறைக்க முடியாத தழும்பு — அல்லி இவ்வளவு உணர்ச்சி வயப்பட்டவளாக இருப்பாள் என்று நினைக்கவில்லை — அல்லி ஒரு பையனோடு ஓடிவிட்டாள், ஐயகோ! நினைக்கக்கூட முடியவில்லையே!! அவ்வளவு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் பிறந்த அவள் இனி எப்படி வாழ முடியும்!

இந்த எண்ணம் என் மனதில் தோன்றியபோது ஒரு சந்தேகமும் ஏற்பட்டது—பெண்கள் எல்லோருமே ஒரு சமயம் அவ்வளவு உணர்ச்சி வயப்பட்டவர்களா! என்று தோன்றிற்று.

ஆயினும் ஒரு மூலையில் என் மனம் "இந்தச் செயலுக்குக் காரணம் நீதான்" என்று சுட்டிச் சொல்வதுபோல் இருந்தது. இது எப்படி என் குற்றமாகும்? அன்று ஓடி வந்திருந்தால் நானல்லவா சிறைக்கம்பி எண்ண வேண்டி இருந்திருக்கும். இன்று அப்படியல்லவே — அந்தப் பையனும் அவளும்சுதந்திரவானம்பாடிகளாகச் சுற்றிவரலாம்.

"அல்லி நீ வாழ்க" என்று என் மனதிற்குள்ளாகவே வாழ்த்தினேன்.

எப்படியோ இரண்டு நாட்கள் கழிந்தது. லீலாவும் என்னுேடு அதிகமாக விளையாடினுள்; நானும் அதை ஏற்றுக்கொள்பவன்போல் இதழோரத்தில் புன்னகை காட்டி விளையாடினேன். எதிரே உள்ள "மரினு கேன்டீன்" இந்தக் கேளிக்கைகளுக்குத் தகுந்த இடமாக இருந்தது.

அன்று மாலை முதல்மணிக்கு வகுப்பு இல்லை; ஆதலால் நானும் லீலாவும் "மரினு கேன்டீன்" போயிருந்தோம் — பணம் என்னிடம் ஏது? அவள்தான் தந்தாள்! ஏதோ பசித்திருப்பவர்கள்போல் "சிப்ஸ்-ம் — காபியும்" சாப்பிட்டோம். விளையாட்டாக ஓரிரண்டு தடவை அவளே சிப்ஸை என் வாயில் போட்டாள்—இதெல்லாம் சர்வசாதாரண விளையாட்டு — ஆகையினுல் நானும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

இப்படி விளையாடிக்கொண்டிருந்தபோது யாரோ ஒரு ஆள் ஓடிவந்து "யார் சந்திரன்" என்று கேட்டான் — அவன் பெருமூச்சு விட்டுக் கேட்பதைப் பார்த்து "என்னப்பா அவ்வளவு அவசரப்படறே, என்னமோ குடி முழுகி விட்ட மாதிரியல்லவா கேட்கிருய்! நான்தான் சந்திரன்; என்னவேண்டும்" என்றேன்.

"தம்பி உன் தந்தை..."

"என் தந்தைக்கு என்ன?"

"ஒரு விபத்தில் அகப்பட்டுக்கொண்டார்..."

"ஐயோ அப்பா..." என்று தலையில் அடித்துக்கொண்டு சாய்ந்து விட்டேன்—வேறென்றும் எனக்குத் தெரியாது.

கண் விழித்து சுய நினைவோடு பார்த்தபோது, கார் வேகமாக ஜெனரல் ஆஸ்பத்திரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது— லீலாதான் காரை ஓட்டிக்கொண்டிருந்தாள் — எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது.

கார் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குள் சென்று நின்றது. மூவரும் இறங்கினேம். வந்த ஆள் முன் போக நானும் லீலாவும் பின் தொடர்ந்தோம்.

ஓடினேன் — துடித்தேன்—என் தந்தை எந்த நிலையில் இருக்கிருரோ! ஐயோ—தாயின் அன்பைப் பெருத நான் தந்தையின் அன்பையாவது வெகு நாளைக்குப் பெறுவதற்கு உரியவன் ஆகக்கூடாதா என்று நினைத்துக்கொண்டே தந்தையின் கட்டில் அருகே சென்றேன்—லீலா ஏனே வெளியே நின்றுவிட்டாள்.

தந்தையின் காலைப் பிடித்துக்கொண்டு "ஐயோ அப்பா, அப்பா" என்று கதறினேன்; தலையிலே பெரிய கட்டு — இடது காலிலும் கட்டு—தந்தை ஏனே கண்திறக்கவில்லை. ஆனல் அந்த வார்ட் நர்ஸ் என்னிடம் ஓடிவந்து,

"இப்படி பேஷண்டை அலட்டக் கூடாது — மயக்கம் இன்னும் ஒருசில நிமிடங்களில் தெளிந்துவிடும் — அதிகமாகப் பேசக்கூடாது—பேசினுல் இரத்தக் கொதிப்பு ஏற்பட்டுவிடும், ஆகவே அதிகம் பேசாதே" என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டாள்.

நர்ஸ் போய்விட்டாள்; ஆனல் தந்தை ஏனே இன்னும் கண் திறக்கவில்லை — ஐந்து நிமிடம் ஆகிவிட்டது — எனக்குப் பயம் அதிகரித்துவிட்டது. என் விரல்களை அவர் மூக்கின் அருகில் கொண்டு போனேன் — சூடான காற்று விரல்களின்மேல் பட்டது; ஒரு நிமிடம் கழிவது ஒரு யுகமாக இருந்தது.

தந்தை தலையசைத்தார். மெதுவாக, சன்னல் கதவுகள் திறப்பதுபோல் இமைகள் திறந்தன — மெதுவாகச்சுற்றுமுற்றும்பார்த்து "சந்திரா...நீ வந்துவிட்டாயா..." இனி என் அருகிலேயே இரு; எங்கேயும் போகவேண்டாம். என் உயிர் போய்விட்ட பிறகு..."

"அப்பா........" என்று அவர் வாயை மூடினேன் "அப்பா —

அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா! என்னை அனாதை ஆக்கிவிடாதீர்கள் அப்பா'' என்று கதறினேன்.

தந்தை மெதுவாக புன்னகை புரிந்தார்.

"சந்திரா — நான் இறந்துவிட்டால்தான் நீ அனாதை என்று நினைத்துக்கொள்ளாதே—நீ பிறந்தது முதல்.........

"அப்பா......அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அப்பா"

"ஆம் சந்திரா, உண்மையைத்தான் சொல்கிறேன்—சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் இரவு சென்ட்ரல் ஸ்டேஷன் பக்கத்தில் இருக்கும் பாலத்தின் மேல் நடந்து வந்துகொண்டிருந்தேன். அப்போது திடீரென்று ஒரு குழந்தை அழும் சப்தம் கேட்டது. சுற்றுமுற்றும் பார்த்தேன்; ஆட்கள் யாரும் இல்லை — ஆனால் பாலத்தின் அடியிலிருந்து வந்த அழும் சப்தம் ஓய்ந்தபாடில்லை. பாலத்தின் பக்கமாக இறங்கிப் போய் பார்த்தேன் — அங்குதான் நீ இருந்தாய் — சின்னஞ் சிறு குழந்தையாக—பெற்றெடுத்தவள் உரிமையின்றி உன்னைப் போட்டு விட்டுப் போய்விட்டாள்.

"ஐயோ... அப்பா! ஏன் அப்பா இதையெல்லாம் சொல்லுகிறீர்கள்—என்னைப் பெற்றெடுத்த தாயே! நீங்கள் செய்த குற்றத்திற்கு நான் சமுகத்திலிருந்து விலக்கப்பட்டவனாக அல்லவா ஆகிவிட்டேன் அப்பா! என் தாய் செய்த தகாத செயலுக்கு நானா அனுபவிக்கவேண்டும்? மறுமுறை என்னை அனாதை என்று சொல்லாதீர்கள் அப்பா! அனாதை என்று மாத்திரம் சொல்லாதீர்கள்'' என்று அவர் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன்.

அதற்குள் நர்ஸும் டாக்டரும் வந்துவிட்டார்கள். என்னை யார் என்று விசாரித்தார்கள். மகன் என்று சொன்னேன். அதிகமாகத் தொந்தரவு கொடுக்கவேண்டாம் —நன்றாகத் தூங்கினால் சரியாகி விடும் — ஓரிரண்டு வாரங்களில் காயம் ஆறிவிடும் என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்கள்.

தந்தைக்கு ஒன்றும் அபாயம் இல்லை என்று தெரிந்ததும், லீலாவிடம் போய் சொல்லலாம் என்று வெளியே ஓடினேன் — ஆனால் அவள் அங்கு இல்லை —என்னுடன் கூடவந்த ஆளைக்கேட்டேன், தந்தையும் நானும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு, ஒன்றும் சொல்லிக்கொள்ளாமல் ஓடி விட்டாள் என்று சொன்னான்.

எங்கள் உரையாடலைக் கேட்டுத்தான் ஓடிவிட்டாள் என்றதும்— என் தலையில் சம்மட்டிகொண்டு அடித்ததுபோல் இருந்தது. ஐயோ! காலமே! பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பது போல் என் உள்ளத்திற்குத் தாக்குதல் மேல் தாக்குதலா!

நர்ஸ் என்னிடம் வந்து 'நீ போய் நாளைவா, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டாம்' என்று சொன்னதும், தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். ஆனால் வழியிலெல்லாம் என் மனம் ஏனோ லீலா ஓடிவிட்டதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தது.

"லீலா என்னை விட்டு ஓடிவிட்டாள்—ஆம்—ஏன் ஓடக்கூடாது? சமுகத்தில்உரிமையின்றிப்பிறந்து வளர்ந்த என்னோடு யார்தான் உறவாடுவார்கள்! இதைத்தான் நான் மறுபடியும் மறுபடியும் நினைத்துக்கொண்டிருந்தேன் — அனாதை — சாதாரண அனாதை கூட அல்ல — பிறந்தபோதே உரிமையின்றிச்சமுகத்தில் பிறந்த அனாதை-சாதாரணமாக அனாதை என்றால் பெற்றெடுத்தவள் யார் என்றாவது சொல்லலாம்; தந்தை யாரென்று தெரியாவிட்டாலும் கூட — ஆனால் நானோ! ஐயகோ! நினைத்தால்கூட மனம் குமுறுகிறதே—நெஞ்சம் வெடித்துவிடும் போல் இருக்கிறதே-பெற்றெடுத்த தாய்கூட யார்என்று தெரியாதே! தாயே! எனை ஈன்ற தாயே! உன் குருதியிலும் ஊனிலும் பிறந்த எனக்கு நீ அளிக்கும் பட்டமா தாயே! அனாதை! ஈன்றெடுத்த தாய் யார் என்று தெரியாத அனாதை!

இப்படி என் எண்ணம் என்னைப் பெற்றெடுத்த தாயையும், கருவுக்கு காரணமாயிருந்த அந்தக் கயவனையும் சுற்றி வட்டமிட்டது- "தந்தைசொல் மிக்க மந்திரமில்லை —தாயினுக்கும் சிறந்த கோவிலுமில்லை''—அவர்கள் அன்று நடத்திய திருவிளையாடலுக்கு நானல்லவா, சமுகத்தில் தலைகுனிந்து வாழவேண்டியிருக்கிறது.

இப்படி எண்ணிக்கொண்டே அன்றிரவு சாப்பிடாமல் வீட்டிலேயே அமர்ந்திருந்தேன் — மணி பதினொன்று அடித்தது. திடீரென்று எனக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. ஏன், நான் கண்டெடுக்கப்பட்ட இடத்தைப் போய்ப் பார்க்கப்படாது என்று, கையில் ஒரு டார்ச்சை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

மின்விசை குறைந்தால் எரியும் விளக்குப்போல, அன்று நிலவு ஏனோமங்கலாகத்தான் இருந்தது. நானும் மெதுவாக நடந்துசென்று அந்தப் பாலத்தை நெருங்கும் போது சென்ட்ரல் ஸ்டேஷன் கோபுரக் கடிகாரம் பன்னிரண்டு அடித்தது. நான் மெதுவாக ஒரு பக்கமாக இறங்கிப் பாலத்தின் கரைக்கு வந்தேன்.

திடீரென்று ஏதோ காற்கள் உருளும் சப்தம் கேட்டது-பாலத்தின் மறுபக்கம், பாலத்தின் சந்துவழியாகவே பார்த்தேன்—ஏதோ ஒரு உருவம் ஓடிவருவதுபோல் இருந்தது.

எனக்கு உடனே பயம் தோன்றி விட்டது—மணியோ இரவு பன்னிரண்டு — எதிரே ஒரு உருவம்— கையிலிருந்த டார்ச்சைப் போடக் கூட மனம் எண்ணவில்லை — உடலெல்லாம் வியர்த்து வெலவெலத்துவிட்டது என்ன செய்வது என்றே தெரியவில்லை — ஏதோ ஒரு உருவம்! ஒரு சமயம் பேய்! அம்மா என்று அலறிவிட்டேன்-கரைநோக்கி வந்த உருவம் அப்படியே நின்றுவிட்டது. எனக்குச் சந்தேகம். என் தாய் தான் பேய் உருவில் இங்கு உலவுகிறாளோ என்று—உருவம் அப்படியே நின்றுவிடச் சிறிது தைரியம்வந்தது. டார்ச்போட்டுப்பார்த்தேன்—ஒரு பெண் உருவம்.

தந்தை சொன்ன அந்த இடமும், அதே இடத்தில் ஒரு பெண் இருப்பதையும் கண்டு தாய்தான் என்று ஓடினேன்.

ஆனால்... அங்கே...... அல்லி தான நின்றுகொண்டிருந்தாள்— எனக்கே திடுக்கிட்டது.

"அல்லி......''

"அத்தான்......''

"அல்லி — யாரைப் பார்த்துக் கூறுகிருய்"

"அத்தான் உங்களைப் பார்த்துத்தான்"

"ஓ... ஓடிப்போனவளே-வெட்கமில்லாமல் என்னை அத்தான் என்ரு கூப்பிடுகிருய் விபசாரி" என்று அவள் கன்னத்தில் அறைந்தேன்.

"அத்தான்... நீங்களா விபசாரி என்று அழைக்கிறீர்கள்? சமூகம் சொன்ஞல்கூட அக்கறையில்லை. ஆனல் எதையும் சிந்தித்துப் பார்க்கும் நீங்களா...?"

"சிந்தித்துப் பார்த்துத்தான் கூறுகிறேன்—என் முன்னே நிற்காதே—எவஞேடு ஓடிவந்தாயோ, அவனுடனேயே போய்விடு"

"அத்தான் என் உண்மைக் கதையைக் கேட்காமல் பழிசுமத்தாதீர்கள். யார் ஒருவரின் ஆசைக்காக ஓடிவந்தேஞே, அவரே இப்படி நிராகரித்தால்! அத்தான் நீங்கள் என்ஞேடு வாழவேண்டாம்—உங்கள் கல்லூரிக் காதலியோடு சுகமாக வாழுங்கள். ஆனல் தயவுசெய்து விபசாரி என்றுமாத்திரம் என்னை அழைக்காதீர்கள்."

"அல்லி என்ன சொல்லுகிருய்—எனக்குக் காதலி யார்?"

"அத்தான் எனக்கு எல்லாம் தெரியும். சிறிது என் கதை முழுவதும் கேளுங்கள்—

அறிவுரை தந்து திரும்பிய நீங்கள், ஏஞே எங்கள் ஊரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை—ஆனல் என் உள்ளம் ஏஞே உங்களையே நாடிற்று—மறைமுகமாக வேலைக்காரன் மூலம் நீங்கள் மாநிலக் கல்லூரியில் படிப்பதாகத் தெரிந்துகொண்டேன்.

வீட்டிலே என் திருமணப்பேச்சு நடந்தது-எனக்குப் பிடிக்கவில்லை-எப்படியாவது உங்களைக் கண்டு இந்தச் சமாசாரத்தைச் சொல்லி, உங்களை எப்படியாவது திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசை"

"அதற்குத்தான் மற்ரெருபையனேடு ஜோடி போட்டுக் கொண்டு வந்துவிட்டாயா?"

"அத்தான் தயவுசெய்து நிதானித்துக் கேளுங்கள் — இந்தப் பேச்சு நடந்துகொண்டிருந்த வேளையில் எழிலூரில் ஒரு வாலிபன் வந்திருந்தான். மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டுபோல் நான் அல்லிக் குளத்துக்கு செல்லும் போதெல்லாம் அங்கு வருவான்—இவன் தொந்தரவும் வீட்டில் திருமணப் பேச்சும் ஏன்ஞல் சகித்துக்கொள்ள முடியவில்லை—எப்படியாவது சென்னைக்கு வந்து உங்களைச் சந்திப்பது என்று திட்டமிட்டேன்.

நான்கு நாட்களுக்கு முன்பு, இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் இரயிலேறிவிட்டேன்—யாரும் பார்க்கக்கூடாது என்பதற்காக முகத்தை முக்காடு போட்டு மறைத்துக்கொண்டிருந்தேன்—இரயிலும் புறப்பட்டுவிட்டது. திடீரென்று ஒரு உருவம் என் பெட்டியில் ஏறியது—மெதுவாகத் தலைதூக்கிப் பார்த்தேன்—அதே வாலிபன்.

ஆயிரம் தேள்கள் ஒன்ருகச் சேர்ந்து கொட்டுவதுபோல் இருந்தது. அவன் அருகில் வந்து முன் பின் தெரிந்தவன்போல "அல்லி நீ என்னிடம் ஒருபேச்சுச் சொல்லியிருக்ககூடாது—இப்படி ஏன் பயந்துபயந்து வரவேண்டும்" என்றதும், அந்தப் பெட்டியிலுள்ளோர் கவனம் முழுவதும் எங்கள் பால் திரும்பியது. நான் ஒன்றுமே பேசவில்லை—அவனும் என் அருகிலேயே (இடம் இல்லாததால்) நின்றுகொண்டிருந்தான்.

எனக்கு ஒரே தூக்கம்! உடல் முழுதும் நகை!! பக்கத்தில் இவன்! எப்படிக்கண்மூட முடியும்? அப்படியும் ஏதோ சிறிது கண் அயர்ந்து தூங்கிவிட்டேன்—என் கையிலே டிக்கட்டும் சிறிது காசும் இருந்தது.

திடீரென்றுயாரோ டிக்கட்டைப் பிடுங்குவதுபோல் இருந்தது. 'டிக்கட் டிக்கட் யாரோ பிடுங்கி விட்டார்கள்' என்று கத்தினேன். பக்கத்திலிருந்த ஒருவர் அவனை அப்படியே பிடித்துக்கொண்டார்—அந்தப் பெட்டியின் ஒரு மூலையில் டிக்கட் பரிசோதனை செய்துகொண்டிருந்தவர் ஓடிவந்தார். அவரிடம் சமாசாரம் சொன்னேன்—அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் அந்த வாலிபன் இழுத்துச் செல்லப்பட்டான்.

இப்படி முதலில் புலிவாயிலிருந்து தப்பிவந்த நான் ஒரு ஓட்டலில் தங்கினேன். மறு நாள் உங்கள் கல்லூரிப்பக்கம் வந்தேன்—யாருக்கும் தெரியாமல் இருக்கவேண்டுமே என்று மறைந்து மறைந்து உங்களைப் பார்த்தேன் — நீங்கள் ஒரு பெண்ணிடம் மிகுந்த ஆசையோடு பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். என்ஞல் பொறுக்க முடியவில்லை, ஓடிவிட்டேன். மறு நாள்வந்தேன். உங்கள் கேளிக்கைகள் அதிகமாக இருந்தது—இன்று பகல்வந்தேன். என்ஞலே சொல்ல முடியவில்லை—அவள்... அவள்...உங்கள் வாயில்...

"அல்லி...அல்லி...,வேண்டாம் எனக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. இனி வாழ முடியாது என்று இந்தக் கால்வாயைத் தேடி வந்தாய் — அல்லி......நீ நிரபராதி—எந்த இடத்தில் நீ வாழ்க்கைக்கு முடிவுதேட வந்தாயோ அங்கேயே நம் வாழ்க்கை ஆரம்பமாகட்டும், அல்லி என்னை மன்னித்துவிடு" என்று அவள் கைகளைப் பற்றினேன்."

"அத்தான் நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்"

"அனுதையென்று வந்தேன்; ஆனல் நீதான் துணைகிடைத்துவிட்டாயே! இனி நான் அனுதை இல்லை—வா—போகலாம்"

★

காலத்திற் கேற்ற கருத்தும், ஒழுக்கமும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்ருய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை,
சூத்திரனுக்கொரு நீதி—தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேருெரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின்—அது
சாத்திரம் அன்று; சதியெனக் கண்டோம்!

—பாரதியார்

# கடன்காரர்களாகிறோம்!

ஆனந்தம் தெரிவித்திருக்கிறார் அமைச்சர்.

வட்டி குறைகிறதாம்'50 இலட்சம் மிச்சமாம்!!—எனவே, அகமகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார், நிதியமைச்சர்.

பிச்சைப்பாத்திரம் ஏந்தி, அமெரிக்காவில் வலம் வரும், டில்லி மந்திரியல்ல, இப்படி ஆனந்தமும் அகமகிழ்ச்சியும் கொள்வது; நமது சுப்ரமணியனார் தான்!!

"நாம் வாங்கிய கடன்கள் சிலவற்றின் வட்டி விகிதங்களைக் குறைத்திருக்கிறார்கள். இதனால், நாம் செலுத்தவேண்டிய வட்டி ஆண்டுக்கு 50 இலட்சம் குறைகிறது", என்று சட்டசபையில் தெரிவித்திருக்கிறார், சுப்பிரமணியம்.

வட்டிக்கு, இவரெங்கே கடன் வாங்கினார்? அமெரிக்காவிலா! ரஷ்யாவிலா!! என்று கேள்வி எழலாம்.

அல்ல, தோழர்காள், அல்ல—மத்திய அரசிடம் வாங்கினாராம், கடன்—அதற்கு வட்டியுண்டாம்—சில கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறதாம் டில்லி.

திகைப்பீர்கள்! — டில்லியிடம் பணம் வாங்குவது பெரும்பாடு, அப்படி வாங்கும் பணத்துக்கும் நாம் வட்டி கொடுக்கிறோம் — எனும் விபரம் கேட்டு.

மாநிலங்களுக்கு அதிபதி டில்லி! மத்திய சர்க்கார், மாகாணங்களுக்கு உதவவும், ஏக இந்தியா எனும் நிலை நீடிக்கவும் இருக்கிறது என்பர்!!

இப்படியொரு மத்திய அரசு இருப்பது, மாநிலங்களுக்கு நல்லது — உடம்புக்கு மூளைபோல என்று உவமையுடன், விளக்கத் தவறமாட்டார்கள், காங்கிரஸ்காரர்கள்.

அந்த மத்திய அரசு, பணம் ஏதாயினும் கொடுத்தால், அதற்கு வட்டிபோட்டு வசூலிக்கிறது! வாரி வாரி மாகாணங்களுக்காக வழங்குவதில்லை!!

கிராமப் புறங்களிலிருக்கும் மார்வாடிகள், நகரத்திலிருக்கும் மாமன் மச்சானிடம் போய், பணம் வாங்கி வந்து, விவசாயிகளிடம் கொடுத்து, வட்டி வாங்குவதுண்டல்லவா? இந்த வேலையைச் செய்வதுதான், டில்லி! அமெரிக்கா போன்ற நாடுகளிடம் பணம் வாங்கிவந்து, நமக்கெல்லாம் வட்டிக்குக் கொடுக்கும் திருப்பணியைச் செய்வதுதான் டில்லி — என்று விளக்கமளிக்கிறார் நிதியமைச்சர்!!

50 இலட்சம் மிச்சப்படுகிறதாம்! 50இலட்சம் அதாவது அரைக்கோடி ரூபாய்கள் மீதப்படுவது மகிழ்ச்சிக்குரிய சேதிதான். ஆனால் ஒன்று, 50 இலட்ச ரூபாய் வட்டி கொடுக்குமளவுக்கு சென்னையிருக்கிறது எனின், வாங்கிய கடன் எவ்வளவு இருக்கவேண்டும்? வட்டி 50 இலட்சம்! வாங்கிய கடன் எத்தனை கோடி நூற்றுக்கணக்கிலா என்றால் இல்லை—சில கோடிகள் தான்!!

சுமார் 60 கோடி ரூபாய்க்கு சென்னை கஜானாவுக்கு வரி செலுத்துகிறோம் நாம்—வருமான வரி, கலால் வரி, சுங்கம், இரயில் மூலம் பலகோடிக் கணக்கான ரூபாய்களை, டில்லி கஜானாவுக்கு வரி செலுத்துகிறோம். நாம் செலுத்தும் வரிகளை, டில்லி வாங்கி, நமது நன்மைக்கான ஏற்பாடுகளைச் செய்கிறது—போதாத பணத்தை வெளி நாடுகளில் கடன் வாங்கிவந்து நமக்கெல்லாம் கொடுத்து உதவுகிறது என்றே கருதி வந்தனர் மக்கள்.

தெளிவுபடுத்துகிறார் நிதியமைச்சர்! சென்னை மாநிலம், எப்போதாவது தட்டுப்பட்டு டில்லியைப் போய்க் கெஞ்சினால், அது தருவது உதவியல்ல — கடன் என்று! அந்தக் கடனுக்கு ஆண்டுதோறும், வட்டியும் கட்டிக் கொண்டு வருகிறோம்.

கொடுத்த கடன்களையே, தள்ளுபடி செய்துவிட வேண்டுமென்று சென்னை அரசு கோரியதா? அல்லது வட்டியை மட்டும் குறைத்தால் போதுமானதெனக் கேட்டுக்கொண்டதா?" என்று, அகமகிழ்ந்த நிதியமைச்சரைப் பார்த்துக் கேள்வியொன்று போடப்பட்டது சட்டசபையில்.

கேட்கப்பட்டதன் நோக்கம், பெரிது பெரிதெனக் கொண்டாடும் டில்லி, ஏனிந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யலாகாது எனும் எண்ணத்தால்தான்! நம்மிடமிருந்து வருமான வரி வாங்கிச் செல்வது டில்லி — கலால் வரி, சுங்க வரி கொண்டுசெல்வது டில்லி — இரயில் நடத்திப் பணம் சம்பாதிப்பது டில்லி—கார்டு கவர் விற்றுப்பணம் பெறுவது டில்லி—

**அண்ணல்**

அப்படிப்பட்ட டில்லியோ, நூறு கோடி இருநூறு கோடியெனப் பல அணைக்கட்டுகளை வடக்கில் தான்கட்டிக்கொண்டிருக்கின்றது. தெற்குக்குத் தருவதோ, மிகமிகக் கொஞ்சம்! அந்தக் காரணத்தைச் சொல்லியாவது, வாங்கிய சில கோடி கடன்களையாவது தள்ளுபடி செய்யுமாறு கேட்பதில் தவறு என்ன? எதுவுமில்லையல்லவா! அதனால்தான் கேள்வி போடப்பட்டது.

அமைச்சர், அதற்குத் தந்த பதில், மிகமிகப் பரிதாபம் கலந்ததாகக், கூறியிருக்கிறார்.

**“நாம் இன்னும் கடன் வாங்கவேண்டி இருக்கிறது. இந்நிலையில் கொடுத்த கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரினால், இனிமேல் எதிர்காலத்தில் கடன் கிடைக்காதே” என்றார்.**

இப்போது வாங்கி, வட்டி செலுத்துவது மட்டுமல்ல—இனியும் வாங்கவேண்டியிருக்கிறதாம் கடன். கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால், கைகொட்டி சிரியாரோ என்றார் கவியரசர் பாரதியார் — வரி வரியாகக் கொட்டிக் கொடுக்கிறோம் டில்லிக்கு! ஆனால் அதனிடமிருந்தோ உதவி பெறுவதற்குப் பதில், கடன் பெறுகிறோம் — அதுவும் வட்டிக்குக் கடன் வாங்குகிறோம்!!

* * *

“எனப்பா, ஆறுமுகம்! அந்தப் பெரிய மனிதனோடு சேர்ந்து கொண்டு திரிகிறாயே. பிள்ளை குட்டிகளைப்பற்றிக் கூடக் கவலைப்படாமல், அவனே சதம் என்று அலைகிறாயே”

“நான் என்ன புத்தியில்லாதவனா! அவன் பெரிய மனிதன். ஊரில் செல்வாக்கு அதிகம். அவனோடு சேர்ந்திருப்பதால் எனக்கும செல்வாக்கு வருகிறது”

“செல்வாக்கு சரி தம்பி! செல்வாக்கு இருந்தால், வீட்டில் அரிசி வந்துவிடுமா — பிள்ளை பெண்டாட்டி வயிறு நிறைந்துவிடுமா?”

“......போகப் போகப் பாருங்க! சமயம் பார்த்து, அவரைக்கேட்டு ஒரு ஆயிரம இரண்டாயிரம் வாங்கி, ஏதாவது தொழில் செய்யலாம் என்றுதான் பார்க்கிறேன. இன்னும் சந்தர்ப்பம் வரவில்லை”

* * *

பெரிய மனிதனுக்குத் துணை போவதால், இலாபம் வருமென்றால், சரிதான்! இலாபமுமில்லாமல், ஏதாவது காப்பிக்கு டீக்கு என்று தரும் ஒரு ரூபாய் அரை ரூபாய்களையும் கணக்குக் காட்டி, அதற்கு வட்டி வாங்கும் நிலையில் அந்தப் பெரிய மனிதன் இருக்கிறான் என்றால், ஆறுமுகம் ஏன் சேர்ந்திருக்கவேண்டும்!!

இந்தியாவுடன் இணைந்திருப்பதால் உலகத்தில் நமக்கு மதிப்பு, இப்படிச் சேர்ந்திருப்பதால் நமது மாகாணத்துக்கு நன்மை என்று சொல்லுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

என்ன நன்மை கிடைக்கிறது என்று பார்த்தால், கொடுக்கும் சில கோடி ரூபாய்களுக்கும் வட்டி கேட்கிறது டில்லி! பிற மாகாணங்களுக்குத் தருவதுபோல, ஐந்தாண்டுத் திட்டத்தில் போதுமான மான்யம் நமக்குத் தரப்படுகிறதா என்றால் அதுவுமில்லை!!

ஆண்டுதோறும், சென்னை சர்க்கார், கடன் கேட்கிறார்கள், மக்களைப்பார்த்து. பத்துக்கோடி பெற்றோம், இருபதுகோடி கிடைத்தது என்று சொல்லி பெருமையும் அடைகிறார்கள்!! அதுபோதாதென்று, டில்லியிடம் கடனும் வாங்கிச் செலவழிக்கிறார்கள்; என்ன செலவுசெய்கிறார்கள் அப்படி? ஏனிவர்களுக்குப் போதவில்லை பணம், என்கிற கேள்விகள் கிளம்பலாம். அது ஒரு புறமிருக்க, இப்படி வட்டிக்குக் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்ன? கடன்தான் வாங்க வேண்டுமா என்பதை, நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

வருவாய் வருவதற்கு இடமில்லாத நாடு அல்ல நம்முடையது. வளங்கள் ஏராளமுண்டு! மலைகளிருக்கின்றன, எதற்கும் உதவாத பனிமலைகள் அல்ல அவைகள்—உலக மார்க்கெட்டிலே விலை போகக் கூடிய காபியும் டீயும் மிளகும் முந்திரியும் விளையும்மலைகள்!! நிலமுண்டு—வெறும் மணல் மட்டும நிரம்பிய பாலைவனமல்ல நமது நிலம்—பாசன வசதியும், மற்ற வசதிகளும் கிடைக்குமாயின், நமது நிலம் வேண்டிய விளைச்சலைத் தரும். கனிப்பொருள்களுக்குப் பஞ்சமானதுமல்ல, நம் நாடு. எல்லாக் கனிப்பொருள்களும் இல்லையென்றாலும், முக்கியமெனக் கருதப்படக் கூடிய பல பொருள்கள் கிடைக்கின்றன. உலகத்திலேயே அபூர்வமான, பழுப்பு நிலக்கரி உண்டு, நமக்கு! அதைக் கொண்டு, இல்லாததையெல்லாம் கூடப் பெற்றுக் கொள்ளலாம்!!

இருந்தும் நம்நாடு, வளமற்றதாயிருக்கிறது--இருக்கும் தேயிலை காப்பித் தோட்டங்களோ, முதலாளிகளுக்குச் சொந்தம் — வயல்களுக்குப் பாசன வசதி செய்ய வேண்டுமானால், அதற்கு வேண்டிய பணம் தரவேண்டிய பொறுப்பு டில்லியிடம் — புதிதாகத் தொழில் துவங்கலாம், சுரங்கங்களை வெட்டித் தோண்டலாமெனிலோ, நமக்கு அதிகாரம் கிடையாது — டில்லியிடம் தான்—இருக்கும் ஒரு டஜனுக்கு மேற்பட்ட துறைமுகங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டு பணம் சம்பாதிக்கலாம் என்றாலோ அதற்குள்ள அதிகாரமும் டில்லியிடம்தான் இருக்கிறது—இப்படி, எல்லாவற்றையும், டில்லியிடம்

## யார் வீட்டுப்பணம்?

—[❋]—

**இருநூறு கோடியிருக்குமாம்! இன்னும் பணக்காரர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டிய வருமான வரி! இந்த 200 கோடியையும் இனிமேல் வசூல் செய்ய முடியாது என்றும், கைவிட்டுவிட வேண்டியது தான் என்றும், கடந்த வாரம் கூடிய காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக்கூட்டத்தில், டில்லி நிதி உதவி மந்திரிகளான கோபால் ரெட்டியும், தாரகேசுவரி அம்மையும் தெரிவித்தனராம்!!**

ஒப்படைத்திருக்கிறோம்! எனவே, வருமானமில்லை — வருமானமில்லாததால் கடன் கேட்க வேண்டிய அவசியம் உண்டாகிறது — இப்படி எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கும் டில்லி, சங்கடம் ஏற்படும் சமயத்தில் ஏதாவது பணம் கொடுத்து உதவுகிறதா என்றால், ஐந்து கோடி பத்துக் கோடி வாங்குவதற்கும் படாத பாடுபடுகிறது — பலதடவைகள் பறந்துபோகிறார் நமது நிதி அமைச்சர் — அப்படிக் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வருவதும், உதவியல்ல, கடன்! அதுவும் வட்டி போட்டுக் கொடுக்க வேண்டிய கடன்!

* * *

"இவர்கள் செலவுகளுக்காக வாங்கும் கடனுக்குத்தான வட்டியே ஒழிய, ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு என்று அளிக்கிறதே பணம், அதற்குமா வட்டிபோட்டு வசூலிக்கிறது? ஏதோ, வட்டி கொடுக்கவேண்டும் என்று நிதியமைச்சர் சொன்னதை வைத்துப் பிரமாதப்படுத்துகிறீரே!" எனக் கூறக்கூடும் காங்கிரஸ் தோழர்கள்.

உண்மைதான், ஏக இந்தியா என்று சொல்லும் டில்லிப் பீடம், ஐந்தாண்டுத் திட்டம்போட்டு, அந்த ஐந்தாண்டுக்கும் 150-கோடி என்று சொல்லி, பிறகு 140-என்று வரையறுத்து வழங்க முன்வருவது உண்மைதான்! 140-கோடி என்றதும் பிரமிப்பாகயிருக்கும் — ஆனால், அந்த 140-கோடியும் ஐந்தாண்டுக்கு ஆகும். அப்படிப் பார்த்தால் ஒரு ஆண்டுக்கு கிட்டத்தட்ட 28-கோடி ரூபாய் தான் நமக்குத் தரப்படுகிறது— ஆனால், மேற்சொன்ன வருமானம் கலால், இரயில், வாணிபம், தபால் முதலியவைகள் மூலம் எவ்வளவு கொண்டுசெல்லுகிறது என்று பார்த்தால், நிச்சயம், இந்த 28-கோடியைவிட அதிகமாகயிருக்குமே ஒழியக் குறையாது!!

இப்படி, ஐந்தாண்டுத் திட்டத்துக்கு டில்லி பணம் தருவதும் எப்படியென்றால், சொந்தமாகச் சம்பாதித்துத் தருகிறதா, மாநிலங்களிலிருந்தெல்லாம் சுரண்டிச் செல்லும் பணங்களைப் பங்கு போட்டுத் தருகிறதா என்று பார்த்தால், இல்லை! இப்படிப் பேர்க்கும் பணத்தையெல்லாம், இராணுவம் பாதுகாப்பு என்று சொல்லி 300 கோடியை ஆண்டு தோறும் அழித்துவிட்டு, ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அமெரிக்கா பணம் தருமா, பிரிட்டன் வழங்குமா என்று ஓடி ஓடி அலைகிறார்கள்! அலைந்து ஏதாவது பெற்று, நமக்கும் தருகிறார்கள்!! அப்படி அவர்கள் கடன் வாங்கும் போது, நேருவின் மேதாவிலாசத்தைக் காட்டியோ, காங்கிரசின் கண்ணியத்தைச் சொல்லியோ, வாங்கவில்லை. அவனும், அதற்காகத் தரவில்லை. இந்த நாட்டின் எழில், வளம், முதலியவைகளை எண்ணியே வெளிநாட்டான் பணம் கடன் தருகிறான். டில்லி இப்படிக் கடன் வாங்குவதன் மூலம், நமது பூமியையும் அடகு வைத்து வருகிறது.

**சென்னை—டில்லிக்கு அடகுவைத்து வட்டிக்குக் கடன் வாங்குகிறது! டில்லி, நமது பூமியை, வெளிநாட்டானுக்கு அடகுவைத்துப் பணம் வாங்குகிறது வட்டிக்கு!!**

முட்டை கால்பணம், சுமைகூலி முக்கால்பணம் என்றொரு பழமொழி சொல்வார்களே; அது போல, காங்கிரஸ் ஆட்சியில், பெறுவது பசியும் பட்டினியும்தானென்றாலும், சுதந்திரம் வந்தது என்பதற்காக, உலக நாடுகளுக்கும் கடன்காரர்களாகிறோம்! டில்லிக்கும் "புரோ" நோட்டு எழுதித் தரவேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்!!

**இரண்டு இடத்துக்கு 'கடன்'காரர்களாகி வருகிறோம் — இந்தக் காங்கிரஸ் ஆட்சியில்! எல்லாமிருந்தும், இப்படிக் கடன்காரர்களாகி வருகிறோம்!**

**போதாக்குறைக்கு, மேலும் மேலும் வேறு வட்டிக்குக் கடன்வாங்கவேண்டியிருக்கும் என்கிறார் சுப்பிரமணியம்!**

★

"இரண்டாவது 5-ஆண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை மாகாணத்தில் 13, புதிய இரயில் பாதைகளை அமைக்க வேண்டுமென, டில்லி சர்க்காருக்கு சென்னை சிபாரிசு செய்தது. ஆயினும் இந்த 13-பாதைகளில் ஒன்றுகூட இரண்டாவது திட்டத்தில் சேர்க்கப்படவில்லை—" எனும் தகவலை, சென்னைமேல்சபையில் 20-ந் தேதி, அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

•

"கோயம்புத்தூரில் மூடிக் கிடக்கும் காளீஸ்வரர் மில்லை ஏற்று நடத்த சென்னை சர்க்கார் தயாராக இருக்கிறது. ஆனால் சட்டம் விதிகள் எல்லாம் இடம்தரவில்லை. மில்லை ஏற்று நடத்துவதும், விடுவதும் மத்திய சர்க்கார் பொறுப்பிலிருக்கிறது. மத்திய சர்க்கார் மனம் வைத்தால் ஏற்று நடத்தலாம். சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரின் ஏஜண்டாக மில் நிர்வாகப் பொறுப்பை ஏற்கத் தயாராயிருக்கிறது" என்று 20-ந்தேதி சட்டசபையில் அமைச்சர் வெங்கட்டராமன் அறிவித்தார்.

•

"மாநிலத்திற்கு இரும்பு உருக்கு 'சப்ளை' செய்வது வரவர குறைவதுகண்டு சென்னை சர்க்கார்கூடக் கவலைப்படுவதாகத் தெரிகிறது. 'சப்ளை'யாகாமல் கோட்டா நின்றது உள்பட இப்போது 10,000-டன் வரை வர வேண்டியிருந்தும், வருவது மாதத்துக்கு 100-டன்தானும் .......செயற்கைப் பட்டு நெய்வதற்கான 'நூல்' இறக்குமதி செய்வதற்குரிய 'கோட்டா' முழுதும் பம்பாய் ஆலை முதலாளிகளுக்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது.........தென்னாட்டு நெசவாளர்களுக்கு உண்மையில் கொஞ்சம்கூடக் கிடைக்கவில்லை...." என்று மெயிலில் ஒரு கடிதம் வந்துள்ளது.

ஆனால்
ஊர்சுற்றும் அமைச்சர்கள்
உரத்துப் பாடுகிறார்கள்!
ஓங்காரக் கூச்சலிடுகிறார்கள்!!
எங்கே, ஏய்க்கிறது வடக்கு என்று?

# இதுவும் "சுதந்திரம்" பெற்ற நாடுதான்!

நிலச் சீர்திருத்தங்கள் மூலமாக நிலப் பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டது. பிரபுத்துவ நிலவுடைமை விரிவடைய முடியாதபடி தடுக்கப்பட்டது.

பழைய ஆட்சியில் அடிமட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நிலமே இருந்ததில்லை. இன்று பெரும்பாலான ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகளின் நிலைக்கு உயர்ந்துவிட்டார்கள். நிலமில்லாத விவசாயிகளே இன்று கிடையாது.

வியத்-நாம் மக்கள் செப்டம்பர் 2ம் நாளன்று வியத்-நாம் ஜனநாயகக் குடியரசின் 13வது ஆண்டு விழாவைக் கொண்டாடினர்கள்.

வியத்-நாம் ஜனநாயகக் குடியரசிற்குச் சமாதான வாழ்வு கிடைத்து நான்கு ஆண்டுகளாகின்றன. இந்த நான்காண்டுகளில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் தொடர்ச்சியாக உயர்ந்து வந்திருக்கிறது. நிலச் சீர்திருத்தமும் பொருளாதாரப் புனரமைப்பும்தான் இந்த வளர்ச்சிக்கு வழிசெய்துகொடுத்த இரண்டு முக்கிய காரணங்களாகும்.

*

ஆகஸ்டு புரட்சிக்கு (1945) முன்பு விவசாயிகள் ஆண்டுதோறும் நிலச்சுவான்தார்களுக்கு சுமார் 6 இலட்சத்து 30 ஆயிரம் டன் நெல் அளக்கவேண்டியிருந்தது. இன்று இந்த நெல் பூராவும் விவசாயிகளுக்கே உரியதாகிவிட்டது.

நகர்களிலும் கிராமங்களிலும் ஒவ்வொருவரின் வருவாயும் படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. பிரெஞ்சுக் காலனி ஆதிக்க ஆட்சியில் 1939ம் ஆண்டில்தான் விவசாயப் பொருளுற்பத்தி மிகவும் அதிகமாயிருந்தது. 1939ம் ஆண்டு உற்பத்தி அளவுடன் ஒப்பிடும்போது 1957ம் ஆண்டில் விவசாய உற்பத்திகள் பெருகி விவசாயிகளுடைய வருவாய் அதிகரித்திருக்கிறதென்பது விளங்கும்.

கிராமாந்தர வேலைகளுக்கான மத்திய குழுவினர் 5 குக்கிராமங்களில் சேகரித்த புள்ளி விவரங்களின்படி, 1957ல் ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரி 586 கிலோ கிராம் நெல் கிடைத்தது. 1952ல் கிடைத்ததைவிட இது 192 கிலோ கிராம் (அதாவது 48.5 சதவீதம்) அதிகமானது.



செப்: 2ந் தேதி, குடியரசு விழாக் கொண்டாடிய வியட்நாம் விடுதலை வீரர் ஹோசிமின்

*

பிரெஞ்சு ஆட்சியாளர்களின் காலத்தில் வடக்கு வியத்நாம் ஆண்டுதோறும் தென் வியத்நாமிலிருந்து ஒன்று முதல் இரண்டு இலட்சம் டன் வரை அரிசி வாங்க வேண்டியிருந்தது. ஆனால் இன்று வடக்கு வியத்நாம் தன் மக்களுக்குத் தேவையான அரிசி முழுவதையும் தானே உற்பத்தி செய்துகொளவதுடன், பெரிய அளவில் அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கிவிட்டது. 1957ல ஒன்றரை இலட்சம் டன அரிசி ஏற்றுமதி செய்தது.

விவசாயிகளின் வருவாய் உயர்ந்து வருவதால் பழைய ஓட்டைக் குடிசைகளுக்குப் பதிலாக இன்று அவர்கள் வசதியான வீடுகள் கட்டிக்கொள்ள முடிகிறது. தவிரவும் மாடுகளும் விவசாயக் கருவிகளும் உரங்களும் வாங்க முடிகிறது.

சமாதானம் ஏற்பட்டதும், தொழிலாளர்கள், சர்க்கார் ஊழியர்கள் இவர்களுடைய சம்பளங்களை 50-சதவீதமும், 40-சதவீதமும் உயர்த்தியது.

பிறகு 1955-ல் ஒரு முறையும் 1956-ல் ஒரு முறையுமாகச் சம்பள விகிதங்கள் பெரிதும் உயர்த்தப்பட்டன. திரும்பவும் இவ்வருடம் மே மாதத்தில் சம்பளங்கள் 13-லிருந்து 50-சதவீதம் வரையிலும் சிற்சில பகுதினருக்கு 70-லிருந்து 80-சத வீதம் வரையிலும் உயர்த்தப்பட்டன.

விலைவாசிகள் உயராதபடி கட்டுப்படுத்தப்பட்டதுடன், குறைக்கப்பட்டுமுள்ளன. இந்நடவடிக்கைகள் யாவும் தொழிலாளர்கள், சர்க்கார் ஊழியர்கள் முதலியோரின் வாழ்க்கையைப் பன்மடங்கு வளமுடையதாக்கியுள்ளன.

வியத்நாம் ஜனநாயகக் குடியரசில் அரசாங்கத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் தொகையில் 80-சத வீதத்திற்கு சமமானவர்கள் தனிப்பட்டோரது ஆலைகளில் வேலை செய்கிறார்கள். சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் முதலாளிகள் தொழிலாளர்கள் பரஸ்பர நலவுரிமைச் சட்டம், பொருளுற்பத்தித் துறையில் முதலாளிகளை ஈடுபடும்படி அவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதுடன், தொழிலாளர்களுடைய நலன்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது.

தொழிற்சங்கச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு முதலாளிகள், தொழிலாளர்களுடன் கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொண்டு 1957-ம் ஆண்டு முதல் இலாபத்தில் ஒருபகுதியைத் தொழிலாளர்களுடன பகிர்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர்.

தொழிலாளர்கள், விவசாயிகள் இதர உழைப்பாளி மக்களின வாழ்க்கைத் தரம் இடையறுது உயர்ந்து வருகிறது.

சோஷலிச நிர்மாணத்திற்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வருவதைக் கண்ணுற்ற பொது மக்கள் புத்துணர்வும் புதுச் சக்தியும் பெற்றுள்ளனர். *